**வடகிழக்கு ஒஹையோவில் வசிக்கும் அன்பிற்குரிய தமிழ் மக்களுக்கு அன்பான வணக்கங்கள்.**

NEOTS இன் ஒவ்வொரு உறுப்பினருக்கும், அவர்களுடைய அரிய திறமைகளை வெளிப்படுத்த ஓர் அற்புதமான வாய்ப்பு.,சிறந்த படைப்புகளை ஒவ்வொரு காலாண்டின் இரண்டாம் வாரம் வெளிவரவிருக்கும் செய்தி மடலில் (**Newsletter**) பிரசுரிக்க உள்ளோம்.

உங்களுடைய சிறந்த படைப்புகளை கீழே கொடுக்கப்பட்டுள்ள பிரிவுகளில் எங்களுடன் பகிருங்கள். நாங்கள் அதைப் பெருவாரியான பார்வையாளர்களுக்கு வெளியிடுவோம்.

**நீங்கள் பகிரும் உள்ளடக்கங்கள் மற்றும் அது தொடர்புடையன கீழ்க்கண்டவற்றை சார்ந்து இருக்க வேண்டும்:**

1. கதைகள் (சிறுகதைகள், தொடர்கதைகள்), கவிதைகள், கட்டுரைகள், ஓவியங்கள், கோலங்கள், பயணப்பதிவுகள், புதிர்கள், நகைச்சுவைகள், சாதனைகள், அறிவியல், வாழ்வியல் குறித்த தகவல்கள், உதவிக்குறிப்புகள்,பாரம்பரிய சமையல் போன்றவை வரவேற்க்கப்படுகின்றன.

2. நீங்கள் ஏதாவது சுவாரசிய சம்பவங்கள் பற்றியும் எழுதலாம், நீங்கள் படித்த புத்தகம், மற்றும் நம்முடைய நிகழ்ச்சிகளுக்கு வந்த பாராட்டுகள் பற்றியும் எழுதலாம்.

**படைப்புகளுக்கான சில குறிப்புகள்:**

**1. உங்களுடைய படைப்புகள் தமிழில் இருக்கவேண்டும். மேலும் அது MICROSOFT WORD DOCUMENTல் பொருத்தமான தலைப்புடன் இருக்க வேண்டும்.**

2. படைப்பாளர்களின் முழுப் பெயர், இடம், கைபேசி மற்றும் புகைப்படத்துடன் ஒரு சுருக்கமான அறிமுகம் மிகவும் அவசியம்.

3. உங்கள் படைப்புகள் இரண்டு பக்கங்களுக்கு மேல் இருக்ககூடாது.

4. உங்கள் படைப்புகள் எந்த ஜாதி, மதம், இனம், நிறம், அரசியல், முதலியவற்றை பாதிக்காமல் இருக்க வேண்டும்.

5. **ஓவியங்களுக்கு பின்பற்ற வேண்டிய விதிகள்**: படங்கள் அல்லது ஓவியங்கள் குறுக்குவாட்டில் இருக்க வேண்டும்.

6. மிகச் சிறந்த சாதனைகளுக்கு வாழ்த்துக் குறிப்பு வரையப்படும்.

உங்கள் படைப்புகளை EducationAndCharity@neots.org என்ற முகவரிக்கு **ஏப்ரல் 17' 2021** க்குள் அனுப்ப வேண்டும். நீங்கள் அனுப்பிய செய்திக்கு அடுத்த வேலை நாட்களுக்குள் உங்களுக்கு ஒப்புதல் வரவில்லை என்றால் மேலே குறிப்பிட்டுள்ள ஈ-மெயிலில் தொடர்பு கொள்ளவும்.

**முக்கிய குறிப்பு : NEOTS உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.**

மிக்க நன்றி.